**R5353**

# "CHOOSE YE THIS DAY"
# "இந்த நாளை தெரிந்து கொள்ளுங்கள்"

"தேவன், தம்முடைய ஒரே பேறான குமாரனை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் கெட்டுப்போகாமல் நித்திய ஜீவனை அடையும்படிக்கு அவரைத் தந்தருளி, இவ்வளவாய் உலகத்தில் அன்பு கூர்ந்தார். "– யோவான் 3:16

வருட கணக்கை முடிப்பதும் புது வருட கணக்கை ஆரம்பிப்பதும் சரக்கு பட்டியல், புத்தகம் இருப்பு கணக்கு, இலாப நஷ்ட கணக்கு மற்றும் எதிர்கால அனுகூலமான கொள்கைளை தீர்மானித்தல் போன்றவைகளுக்கு உகந்த காலமாக இருக்கிறது. பூமிக்குரிய காரியங்களில் இப்படியாக நாம் விவேகமாக இருந்து, மேலான (ஆவிக்குரிய) காரியங்களில் அக்கறையில்லாமல் இருந்தால் அது வருத்தத்திற்குரியதும் பரிதபிக்கப்படத் தக்கதுமாக இருக்கும். இயேசுவும் பங்குதாரராகவும் ஆலோசகராகவும் வழிகாட்டியாகவும் இருந்தால் ஒழிய, இந்த வருட முடிவில் மிகவும் திருப்திகரமான வரவு செலவு கணக்குகளை எந்த ஆத்துமாவும் கொடுக்க இயலாது என்று நாம் பாதுகாப்பாக கூறலாம். வருட முடிவில் ஒவ்வொருவரும் தனது காரியங்களின் நிலைமையில் அதிருப்தியடைந்திருக்கிறார்கள். ஒவ்வொருவரும் களைப்படைவர்களாகவும், கனத்த இருதயத்துடனும் குழப்பத்துடனும் அதைரியத்துடனும் காணப்படுகிறார்கள். "வருத்தப்பட்டு பாரஞ்சுமக்கிறவர்களே, நீங்கள் எல்லாரும் என்னிடத்தில் வாருங்கள்; நான் உங்களுக்கு இளைப்பாறுதல் தருவேன்" என்று அறிவிக்கிற இரட்சகருடன் உடன்படிக்கையின் உறவுக்குள் நுழைந்து புதுவருடத்தை எப்படி சரியாக ஆரம்பிப்பது என்று தெரிந்து கொள்ள விரும்புகிறோம்.

இன்றைய பாடம் முழுவதும் உதவிகரமான வழிமுறைகள், நாம் கற்றுக்கொள்ள வேண்டிய முதல் பாடம். "தேவன் உலகத்தில் எவ்வளவாய் அன்பு கூர்ந்தார்" என்பதாகும். சிந்திக்கிற ஜனங்களுக்கு இதைக்காட்டிலும் கவரக்கூடிய செய்தி வேறு ஏதுமில்லை. கடந்த காலத்தில் தேவனுடைய அன்பை நாம் வலியுறுத்திக் கூறாததே சபைக்கும் உலகத்திற்கும் கஷ்டமாக இருந்தது. வேதாகமத்தின் தேவனிடமிருந்து நமது புரிந்துகொள்ளும் கண்களை நமது விசுவாச பிரமாணம் தவறாக வழி நடத்தும் போது எப்படி நாம் இதை செய்ய முடியும். இந்த விசுவாசப்பிரமாணம் பரம பிதாவை சாத்தானில் நிறத்தில் அதாவது மிகவும் அன்பற்றவராக, மிகவும் அநீதியுள்ளவராக, மானிடரைக் காட்டிலும் கொடூரமானவராக, நாம் அறிந்தேயிராத, நாம் கற்பனை செய்து பார்க்கவே முடியாத ஒரு பிசாசு போன்று சித்தரித்துக் காட்டியது! நாம் கிறிஸ்தவர்களாக இந்த பயங்கரமான சித்திரங்களை மறந்து விட்டு, இன்றைய பாடத்தின் விலையேறப்பெற்ற வேத வாக்கியங்களை நமது மனதிலே நிரப்பிக் கொள்ளுவது நமக்கு நல்லது.

ஆனால் நாம் இப்படியாக "பிசாசுகளின் உபதேசங்களுக்கு" (2தீமோத்தேயு 4:1)விலகியிருக்கும் போது, பரிசுத்த பவுல் அழைப்பது போல கிறிஸ்தவர்கள் இந்த மோசமான அவதூறான விசுவாச கோட்பாடுகளை இன்னும் உலகத்திறகு முன்பாக பிடித்துக்கொண்டிருக்கிறார்கள். இது "எல்லா புத்திக்கும் மேலான தேவனுடைய அன்பின்" நீளம், அகலம், ஆழத்தின் ஒரு கணநேர பார்வையைக் கூட காண முடியாதபடி தடுக்கிறது. அதற்கு பதிலாக தேவ அநீதியான நீளம், அகலம் மற்றும் ஆழத்தை தவறாக சித்தரித்துக் காட்டுகின்றன. இப்படியாக நாம் உண்மையான தேவனை அவர்களது நண்பராக உணர முயற்சிக்க உதவுவதற்கு பதிலாக, நம்மை அறியாமலேயே உலகமானது தேவனை விட்டு விலகும்படி செய்கிறோம்.

ஆனால் தேவனுடைய ஜனங்கள் சத்தியத்துக்கு விழித்துக்கொண்டு அதை உறுதிப்படுத்தவும், "அந்தகாரத்தினின்று தம்முடைய ஆச்சரியமான ஒளியினிடத்திற்கு வரவழைத்தவருடைய புண்ணியங்களை அறிவிக்கவும்" படிப்படியாக தைரியத்தை பெற்றுக்கொண்டிருக்கிறார்கள். தெய்வீக குணலட்சணத்தின் நமது தெய்வ நிந்தனையை உலகமானது முழுவதுமாக நம்பி இருந்ததால், மகா சந்தோஷத்தின் செய்தியை, வேதாகமத்தின் கிருபையான செய்தியை நாம் அவர்களுக்கு கொண்டுவரும் போது, அதை அவர்கள் அபூர்வமாக விசுவாசிக்கிற கஷ்டத்தை நாம் சந்திக்கிறோம்.

## "அழியாதபடிக்கு"

நாம் கவனித்துக்கொண்டிருக்கிற வசனமானது கடந்த காலத்தின் நமது அடிமைத் தனத்தையும் குருட்டுத்தனத்தையும் விளக்கி, தேவனுடைய நீதியை நமக்கு சொல்லுகிறது. நம்மை நித்திய ஆக்கினையிலிருந்து காப்பாற்ற தேவன் தமது ஒரே பேறான குமாரனைத் தந்தார் என்று நாம் ஒரு காலத்தில் கருதியது போல அது கூறவில்லை. அதற்கு முற்றிலும் மாறாக, அவரது பணி நம்மை அழிந்து போவதிலிருந்து காப்பாற்றவே என்று அது அறிவிக்கிறது. அழிந்துபோவது எதை க் குறிக்கிறது என்பதை நாம் அறிவோம். புத்தியில்லா மிருகங்கள், அவைகள் மரிக்கும் போது அழிந்து போகின்றன. ஏனெனில் தேவன் அவைகளுக்கு உயிர்த்தெழுதலை ஏற்பாடு செய்யவில்லை. தேவனுடைய இரக்கமும் கிறிஸ்துவுக்குள்ளான ஏற்பாடும் இல்லாதிருந்தால், "நீங்கள் சாகவே சாவீர்கள்" என்ற மரண தண்டனைக்கு கீழாக இருந்த மனுக்குலம் நம்பிக்கையில்லாமல்

புத்தியில்லாத மிருகங்களைப் போல அழிந்து போயிருப்பார்கள். மரண தண்டனைக்கு மீட்கும் பொருள் கொடுக்கவும், எல்லா மனிதரும் உயிர்த்தெழுதல் பெறவும் ''கிறிஸ்து நமது பாவங்களுக்காக மரித்தார்.'' ''ஒவ்வொரு மனிதனுக்காகவும் மரணத்தை ருசி பார்த்தார்.''

இயேசுவின் மரணமில்லாதிருந்தால், நமது இனம் புத்தியில்லாத மிருகங்களைப் போல அழிந்து போயிருக்கும். அவரது மரணத்தினால் இப்போது விசுவாசத்தினால் தேவனுடன் இணக்கத்திற்கு வருகிற நீதிமான்கள் மாத்திரமல்ல, தேவனுடைய கிருபையையும் அதன் நீளம், அகலம், உயரம் மற்றும் ஆழத்தையும் காணும்படி அறிவின் கண்கள் இன்னும் திறக்கப்படாமல் இருக்கிற, தேவனைப்பற்றிய அறிவுக்கு இன்னும் வராதிருக்கிற அநீதிமான்களுக்கும் கூட உயிர்த்தெழுதல் இருக்கும். நாம் வாசிக்கிறதாவது: ''ஆதாமுக்குள் எல்லாரும் மரிக்கிறது போல கிறிஸ்துவுக்குள் எல்லாரும் உயிர்ப்பிக்கப்படுவார்கள்.'' ''மனுஷனால் மரணம் உண்டானபடியால், மனுஷனால் (கிறிஸ்து இயேசு) மரித்தோரின் உயிர்த்தெழுதலும் உண்டாயிற்று.'' ''அவனவன் தன் தன் வரிசையிலே உயிர்ப்பிக்கப்படுவான்.''

மரித்தோரின் உயிர்த்தெழுதல் இல்லாவிட்டால், ஒரு எதிர்கால வாழ்க்கையின் நம்பிக்கை இராது. நித்திரையடைந்தவர்களும் கெட்டிருப்பார்கள் என்று பரிசுத்த பவுலே நமக்கு குறிப்பாக கூறுகிறார். இயேசு நமது பாவங்களுக்காக மரித்து, பிதாவனவரால் மரித்தோரிலிருந்து அவர் உயிர்த்தெழுப்பப்பட்டதால் கிறிஸ்துவுக்குள் மரித்தவர்களும், அவரது மீட்பின் இரத்தத்தால் கிரயத்துக்கு கொள்ளப்பட்டவர்களும் உலகத்தின் மனுக்குலம் முழுவதும் தேவனால் கொண்டு வரப்படுவார்கள் என்று அவர் குறிப்பிட்டு கூறுகிறார். ஆகையால் கிறிஸ்துவுக்குள் இல்லாத மற்றும் சபை நம்பிக்கை இல்லாத நமது நண்பர்கள் மற்றும் உறவினர்களுக்காக கூட நாம் நம்பிக்கையற்றவர்களைப் போல துக்கப்பட வேண்டியதில்லை. (1கொரிந்தியர் 15ஐப் பார்க்கவும்)

## ''மேன்மையான உயிர்த்தெழுதல்''

கனம், மகிமை, சாகாமைக்குரிய உன்னதமான உயிர்த்தெழுதல், சுவிசேஷ யுகத்தில் அழைக்கப்பட்டு, நேர்மையான இருதயத்தில் அழைப்பை ஏற்றுக்கொண்டு, ஒவ்வொரு சுமையையும் ஒதுக்கி வைத்து விட்டு பரிசுக்காக பொறுமையுடன் பந்தயத்தில் ஓடுகிறவர்களுக்கு மட்டுமே கிடைக்கும். இந்த பரிசுத்தவான்கள் ராஜரீக ஆசாரிய கூட்டத்தை அமைப்பார்கள் என்று இயேசு அறிவிக்கிறார். அவர்கள் ராஜரீக பிரதான ஆசாரியராகிய அவருடன் இணைந்து, அவரது ஆயிரவருட அரசாட்சியில், உலகத்தை பாவம் மற்றும் மரணத்திலிருந்து உயிர்த்தெழுப்பி, உலகத்தை மறுசீரமைத்து, உலகத்தை ஆசீர்வதிக்கக்கூடிய வேலையில் ஈடுபடுவார்கள்.

கிறிஸ்துவுக்குள்ளான புதிதான ஜீவனில் தங்கள் இருதயத்தில் முன்னேறிய விசுவாசிகளில் தற்காலத்தில் சபையின் உயிர்த்தெழுதல் ஆரம்பிக்கிறது. (கொலோசேயர் 3:1) ''அழிவுள்ளதாகிய இது அழியாமையை தரித்துக்கொள்ளும் போது'' ''ஒரு நிமிஷத்திலே ஒரு இமைப்பொழுதிலே மறுரூபமாக்கப்படும்.'' ''ஏனெனில் மாம்சமும் இரத்தமும் தேவனுடைய ராஜ்யத்தை சுதந்தரிப்பதில்லை.'' (1கொரிந்தியர் 15:50)''

## ''அவரை விசுவாசிக்கிறவன் எவனோ''

மீட்பராகிய கிறிஸ்துவுடன் தனிப்பட்ட உறவும் அவரது மீட்பின் இரத்தத்தில் விசுவாசமும், அவரது ஆலோசனைக்கு கீழ்ப்படிதலும் உள்ளவர்கள் தவிர வேறு யாரும் நித்திய ஜீவனை அடையாதபடிக்கு தெய்வீக திட்டம் தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. இது உண்மையாக இருக்குமானால், புறஜாதியாரின் யாரும் இன்னும் இரட்சிக்கப்படவில்லை. இயேசு பூமிக்கு வருவதற்கு முன் வாழ்ந்தவர்கள் யாரும் இன்னும் இரட்சிக்கப்படவில்லை. இன்னும் திரளான ஜனங்களாகிய நமது நண்பர்கள், அண்டை வீட்டார் நமது சொந்த குடும்பங்கள் கூட இன்னும் இரட்சிக்கப்படவில்லை. ஏனெனில் இன்னும் அவர்கள் இரட்சகருடன் முக்கியமான உறவுக்குள் வரவில்லை. ''குமாரனை உடையவன் ஜீவனை உடையவன்; குமாரனை விசுவாசியாதவனோ ஜீவனைக் காண்பதில்லை.'' (1யோவான் 5:12; யோவான் 3:36)

இயேசு எல்லா மனுஷருக்காகவும் மரித்தார் என்றும் எல்லாரையும் மீட்கும் பொருளாகத் தம்மை ஒப்புக்கொடுத்தார் என்றும் இதற்குரிய சாட்சி ஏற்ற காலங்களில் விளங்கி வருகிறது என்றும் பரிசுத்த பவுல் கூறுகிறார். (1தீமோத்தேயு 2:5,6) இதற்குரிய சாட்சிக்கான தேவனுடைய ஏற்ற காலம் உலகிற்கு வெளியரங்கமாக இன்னும் வரவில்லை. இயேசு, ''ஜீவனையும் அழியாமையையும் சுவிசேஷத்தினாலே வெளியரங்கமாக்கும்'' பொழுது சாட்சியம் ஆரம்பமானது. நாம் வாசிக்கிறதாவது: ''முதலாவது கர்த்தர் மூலமாய் அறிவிக்கப்பட்ட இவ்வளவு பெரிதான இரட்சிப்பு.'' (எபிரேயர் 2:3,4)

அப்பொழுதிலிருந்து இங்கேயும் அங்கேயும் காதுள்ள சிலர் தேவனுடைய கிருபையையும் அவரது தெய்வீக பராமரிப்புகளையும் காண்கிறார்கள். இந்த வகுப்பாரை இயேசு வாழ்த்தி கூறுவதாவது: ''உங்கள் கண்கள் காண்கிறதினாலும் உங்கள் காதுகள் கேட்கிறதினாலும் அவைகள் பாக்கியமுள்ளவைகள்.'' மனுக்குலத்தில் திரளானவர்கள் காணவுமில்லை, கேட்கவுமில்லை. ஏனெனில், பரிசுத்த பவுல் கூறுவது போல, நமது கர்த்தராகிய இயேசுவின் முகத்திலுள்ள தேவனுடைய கிருபையின் மெய்யான ஒளியை அவிசுவாசிகளாகிய அவர்களுக்கு பிரகாசமாக இராதபடிக்கு இப்பிரபஞ்சத்தின் தேவனானவன் அவர்களது மனக்கண்களை குருடாக்கியிருக்கிறான். (2கொரிந்தியர் 4:4-6)

தேவன் இந்த குருட்டுத்தனத்தை அனுமதித்திருக்கிறார். ஆனால் அது சீக்கிரத்தில் முடிவுக்கு வரும் என்று அறிவிக்கிறார். மேசியாவின் ராஜ்யத்தின் ஆசீர்வதிக்கப்பட்ட செல்வாக்கின் கீழ் சத்திய வெளிச்சம் எல்லா இடங்களிலும் பிரகாசிக்கும். அது மாத்திரமல்ல, ''குருடரின் கண்கள் திறக்கப்பட்டு, செவிடரின் செவிகள் திறவுண்டுபோம்'' என்றும் அவர் அறிவிக்கிறார். பலவீனமான உலகத்தின் பொருட்டு எப்படிப்பட்ட ஆசீர்வாதமான காட்சியை இது நமக்கு முன்பாக திறக்கிறது! தேவன் தமது

சபைக்காக, சிறுமந்தைக்காக, பரிசுத்தவான்களுக்காக விசேஷித்த ஆசீர்வாதத்தையும் கிருபையையும் வைத்திருக்கிறார். ஆனால் அவர் உலகத்திற்காகவும், ஆசீர்வாதத்தை அது சபைக்கானதைக் காட்டிலும் மாறுபட்டதாக இருந்தாலும் வைத்திருக்கிறார் என்பதை நாம் இப்பொழுது தெரிந்து கொள்ளுகிறோம்.

தேவன் சபையை மட்டும் நேசிக்காதபடி, உலகத்தையும் நேசித்தார் என்று நமது வசனம் நமக்கு சொல்லுகிறது: அவர் சபையை மட்டும் இரட்சிக்கவில்லை. உலகத்தையும் இரட்சிக்கிறார். விசுவாசத்தின் மூலம் நித்திய ஜீவனை அடையும்படியான சந்தர்ப்பத்தை அனைவரும் பெறுவார்கள். எனினும் உலகத்திற்காக வைத்திருக்கிற ஜீவன், வேதாகமத்தின்படி, சபைக்கு கொடுக்கப்படுகிறதைக் காட்டிலும் மிகவும் வேறானதாக இருக்கிறது. சபையானது தெய்வீக தளத்தில் ஜீவனைப் பெற்று தெய்வீக சுபாவத்தில் பங்கு பெறுவார்கள். அவர்கள் ஆண்டவரின் கனம், மகிமை, சாகாமையில் பங்கு பெறுவார்கள். உலகமானது மேசியாவின் ராஜ்யத்தில் கீழ்ப்படிதலினாலும், விசுவாசத்தினாலும் ஆதாம் இழந்ததும், இயேசுவினால் கல்வாரியில்;உலகத்திற்கு மீட்கப்பட்டதுமான பூமிக்குரிய மற்றும் பூரண ஜீவனை மறுபடியும் பெறும்படி சலுகை பெறுவார்கள்.

ஜீவனை அளிப்பவருடன் கீழ்ப்படிதலுடனும் விருப்பத்துடனும் உறவுக்குள் வருகிறவர்கள் நித்திய ஜீவனை பெறுவார்கள். இந்த ஜீவன் பிதாவாகிய ஆதாமுக்கு நிபந்தனையுடன் கொடுக்கப்பட்டு, கீழ்ப்படியாமையினால் இழந்து போனது. எனினும் கிறிஸ்துவுக்குள்ளான தேவனுடைய இந்த கிருபையை மறுதலித்து, கிறிஸ்துவுடன் முக்கியமான இணைப்புக்குள் வருவதில் தோல்வியடைகிறவர்கள் அழிந்து போவார்கள். ஆனால் அவர்கள் முதலாவது அல்லது ஆதாமிய மரணத்தினால் அழிந்து போக மாட்டார்கள். ஏனெனில் இதிலிருந்து அனைவரும் ஆண்டவரினால் மீட்கப்பட்டு தப்புவிக்கப்பட்டார்கள். வேண்டுமென்றே செய்த அவர்களது சொந்த பாவங்களுக்காக இரண்டாம் மரணத்தில் அழிந்து போவார்கள். ஏனெனில் அதிலிருந்து மீட்படைய நம்பிக்கை இராது. “ஏனெனில் இனி கிறிஸ்து மரிக்கமாட்டார்.” இரண்டாம் மரணத்திலிருந்து யாரும் மீட்கப்படமாட்டார்கள்.